## சிந்து சமவெளி நாகரிகத்துக்கு இணையானது பொருநை நாகரிகம்: தொல்லியல் ஆய்வாளர்கள் கருத்து



**தூத்துக்குடி:** சிவகளையில் கண்டெடுத்த முதுமக்கள் தாழியில் உள்ள உமியின் காலம் சுமார் 5 ஆயிரம் ஆண்டு பழமையானது என கண்டறியப் பட்டுள்ளதால் பொருநை கரை நாகரிகம் சிந்து சமவெளி நாகரிகத்துக்கு முந்தையது என்று தொல்லியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சென்னை செம்மஞ்சேரியில் உள்ள ஆராய்ச்சி நிறுவனத்தில் 11-வது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு ஜூலை 7-ஆம் தேதி தொடங்கி இன்று (9-ம் தேதி) வரை நடக்கிறது.

இந்த மாநாட்டில் "சமீபத்திய தொல்பொருள் ஆராய்ச்சியும் தமிழர்களின் கலாச்சாரத்தில் இதன் தாக்கமும்" என்ற தலைப்பில் தமிழ்நாடு தொல்லியல் துறை ஆலோசகர் முனைவர் ராஜன் பேசும்போது, " தூத்துக்குடி மாவட்டம் சிவகளையில் கண்டெடுத்த முதுமக்கள் தாழியில் உள்ள உமி சுமார் 5 ஆயிரம் ஆண்டு பழமையானது. இதனால் சிந்து சமவெளிக்கு இணையாக தாமிரபரணி கரை நாகரிகம் பேசப்படும், என தெரிவித்துள்ளார். அவரது கருத்து தொல்லியல் வரலாற்றில் ஒரு மைல் கல்லாக பார்க்கப்படுகிறது.

இது குறித்து திருநெல்வேலி மனோன் மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக தொல்லியல் இயக்குநர் முனைவர் சுதாகர் கூறியதாவது: சமீபத்திய தொல்பொருள் ஆராய்ச்சி பொருநை நாகரிகத்தின் காலம் சிந்து சமவெளி நாகரிகத்துக்கு இணையானது எனக் கண்டறிந்துள்ளது. சிந்து சமவெளி நாகரிக மக்கள் இரும்பு பொருட்கள் பற்றிய நுட்பங்களை அறியவில்லை.

ஆனால் பொருநை நாகரிக மக்கள் 4,500 ஆண்டுகளுக்கு முன்னரே இரும்பில் ஆயுதங்கள் செய்து வாழ்ந்துள்ளனர். எனவே, பொருநை கரை நாகரிகத்தை சிந்து சமவெளிக்கு முந்தையது எனக் கூட கூறவாய்ப்புள்ளது. இரு நாகரிக மக்களுக்கும் தொடர்பு இருந்திருக்க வாய்ப்புள்ளது எனவும் நம்பப்படுகிறது.

பொருநை கரையில் சிவகளையில் பானையில் கண்டெடுக்கப்பட்ட இரும்புப் பொருட்கள் 4,500 ஆண்டுகள் பழமையானது என்றால் மிகையாகாது. 4,500 ஆண்டுக்கு முன்பே தமிழன் இரும்பு வாள் தயாரித்து பயன்படுத்தியுள்ளான். இதனைக் கண்டறிய முதலில் "இந்த இடத்தில்தான் இரும்பு உள்ளது?" எனத் தெரிய வேண்டும்.

பின்னர் அங்குள்ள மண்ணை அள்ளி அதனில் இருந்து இரும்பை பிரித்தெடுக்க வேண்டும். அவ்வாறு பிரித்தெடுத்த இரும்பை வைத்து எந்த வகையான பொருட்களாக மற்றும் ஆயுதமாக வடித்தெடுக்க வேண்டும் என முடிவு செய்ய வேண்டும். இந்த வேலைகள் அனைத்தையும் முடிக்கப் பல தொழில் நுட்பம் வேண்டும்.

இந்த பரிணாமத்துக்கு சுமார் 500 ஆண்டுகளுக்கும் மேலான காலம் எடுத்திருக்கும் என்பது என் கருத்து. அதனால் தமிழர்களுக்கு 5,000 ஆண்டுகளுக்கு முன்னரே இரும்பைப் பற்றிய அறிவு மற்றும் நுட்பம் இருந்துள்ளது. எப்படி தற்போதுள்ள மொழிகளில் பழமையானது தமிழ் என்பது உறுதிப் படுத்தப்பட்டுள்ளதோ? அதுமாதிரி இரும்பை முதன் முதலில் கண்டறிந்தது தமிழன் என்ற வாக்கியம் உலக நாடுகளின் பாடப்புத்தகங்களில் வருவது உறுதி, என்றார்.

**பனகல் அரசர் வழிநடந்து தமிழகத்தை முன்னேற்றுவோம்: முதல்வர் மு.க.ஸ்டாலின்**



பனகல் அரசர்

**சென்னை:** பனகல் அரசர் வழிநடந்து தமிழகத்தை முன்னேற்றுவோம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

பனகல் அரசரின் பிறந்தநாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது சமூக வலைதள பக்கங்களில் வெளியிட்டுள்ள பதிவில், "திராவிட அரசுகளின் ஆதிவிதையாக விளங்கும் பனகல் அரசரின் பிறந்தநாள் இன்று! அதிகாரத்தை நாம் அடைவதன் மூலம் நமது மக்களுக்கு நம்மால் எத்தகைய நன்மைகளைச் செய்ய முடியும் என்பதை வகுப்புவாரி பிரதிநிதித்துவத்துக்கான அரசாணை, மருத்துவம் படிக்க சமஸ்கிருதம் தேவையில்லை, பெண்களுக்கு வாக்குரிமை, அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் போன்ற எண்ணற்ற புரட்சிகரத் திட்டங்களால் காட்டியவர் அவர்!

பனகல் அரசர் பற்றிய துணைப்பாடக் கட்டுரைதான் பள்ளி மாணவராக இருந்த கருணாநிதிக்கு அரசியல் அரிச்சுவடியாக விளங்கியது. "தேடற்கரிய ஒப்புயர்வற்ற நமதருமைத் தலைவர்" எனத் தந்தை பெரியார் போற்றிய பனகல் அரசர் வழிநடப்போம்! தமிழகத்தை முன்னேற்றுவோம்!" இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

**புதுக்கோட்டை பொற்பனைக்கோட்டை அகழாய்வு: முதல் முறையாக தங்க ஆபரணம் கண்டெடுப்பு**




புதுக்கோட்டை மாவட்டம் பொற்பனைக்கோட்டை அகழாய்வில் கிடைத்த அணிகலன்.

**புதுக்கோட்டை**: புதுக்கோட்டை அருகே பொற்பனைக்கோட்டை அகழாய்வில் முதல் முறையாக தங்க அணிகலன் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

சங்ககால வாழ்விடப் பகுதியாக விளங்கும் பொற்பனைக்கோட்டையில் தமிழக தொல்லியல் துறையின் மூலம் கடந்த 2 மாதங்களாக இயக்குநர் தங்கதுரை தலைமையில் அகழாய்வு பணி நடைபெற்று வருகிறது.

இதுவரையில் தலா சுமார் 15 அடி நீள, அகலத்தில் 8 இடங்களில் அகழாய்வு நடைபெற்று வருகிறது. அதில், ஒரு குழியில் 133 செ.மீட்டர் ஆழத்தில் 6 இதழ் கொண்ட தங்க அணிகலன் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

மற்றொரு குழியில் சுமார் 145-ல் இருந்து 160 செ.மீட்டர் ஆழத்தில் எலும்பு முனை கருவியும், வட்ட வடிவில், சிவப்பு நிறத்தில் கார்னீலியன் சூதுபவள மணியும் கிடைத்துள்ளது.

இது குறித்து தொல்லியல் ஆய்வாளர்கள் கூறியது: 26 மில்லி கிராம் எடையுள்ள 6 இதழ் கொண்ட அணிகலன் ஒன்று கிடைத்துள்ளது. இது, மூக்குத்தி அல்லது தோடாக பயன்படுத்தி இருக்கலாம் என தெரிகிறது. இது சங்க காலத்தின் வரலாறு மற்றும் பண்பாட்டை வெளிப்படுத்தும் விதமாக உள்ளது. இதுவரையிலான அகழாய்வில் இதுவே முதல் முறையாக கண்டெடுக்கப்பட்ட தங்க ஆபரணமாகும்.

இதேபோன்று, கண்டெடுக்கப்பட்டுள்ள எலும்பு முனை கருவியானது நூல் நூற்பதற்காக நெசவு தொழிலுக்கு பயன்படுத்தி இருக்கலாம் என தெரிகிறது.மேலும், கார்னீலியன் எனும் கல்லானது குஜராத்தில் கிடைக்கக் கூடியது. கார்னீலியன் கல்லால் செய்யப்பட்ட சூதுபவள மணியானது வரலாற்று தொடக்க காலத்தில் இருந்த உள்நாட்டு வணிகத்தை எடுத்துக்காட்டும் வகையில் உள்ளது. இந்த தொல்பொருட்கள் அனைத்தும் வரலாற்றில் மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாம்.

அகழாய்வு தொடங்கி சில நாட்களிலேயே 19 சென்டி மீட்டர் ஆழத்தில் செங்கல் கட்டுமானம் தென்பட்டது. தற்போது அனைத்துக் குழிகளிலும் இந்தக் கட்டுமானம் தெரிகிறது.

மேலும், துளையிடப்பட்ட மேற்கூரை ஓடுகளும், பல வண்ணங்களில் பானை ஓடுகள், வட்டச் சில்லுகள், கண்ணாடி வளையல்கள், கண்ணாடி மணிகள், சுடுமண் விளக்கு, பீங்கான் ஓடுகள் கிடைத்துள்ளன" என்றனர்.

**கீழடி 9-ம் கட்ட அகழாய்வு பணி தீவிரம்: தங்க அணிகலன், சுடுமண் காளை உட்பட 183 தொல்பொருட்கள் கண்டெடுப்பு**




கீழடி அகழாய்வில் கண்டறியப்பட்ட அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய சூடுமண்ணால் செய்யப்பட்ட காளை உருவம்.

**திருப்புவனம்**: சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே கீழடியில் தொல்லியல்துறை இணை ஆணையர் சிவானந்தம் மீண்டும் பொறுப்பேற்றதை அடுத்து, அகழாய்வு பணி தீவிரப்படுத்தப்பட்டது. இதுவரை தங்க அணிகலன், சுடுமண் காளை உட்பட 183 தொல்பொருட்கள் கண்டறியப்பட்டன.

கீழடி, கொந்தகை, அகரம், மணலூர் ஆகிய 4 இடங்களில் ஏற்கனவே 8- கட்ட அகழாய்வு பணிகள் முடிவடைந்தன. இதில் கண்டறியப்பட்ட பல ஆயிரம் தொல்பொருட்கள் கொந்தகையில் கீழடி அகழ் வைப்பகத்தில் வைக்கப்பட்டு, பொதுமக்கள் பார்வையிட்டு வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த ஏப்.6-ம் தேதி கீழடியில் 9-ம் கட்ட அகழாய்வு பணியை காணொலி மூலம் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். கீழடி,

கொந்தகை, அகரம் ஆகிய 3 இடங்களில் அகழாய்வு நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. ஆனால் அகழாய்வு பணி தொய்வாக நடந்து வந்ததால் குறைவான தொல்பொருட்களே கண்டறியப்பட்டன.

இந்நிலையில் மீண்டும் தொல்லியல்துறை இணை இயக்குநராக சிவானந்தம் பொறுப்பேற்றதை அடுத்து, அகழாய்வு பணி தீவிரப்படுத்தப்பட்டது. இதுவரை கீழடியில் 9 குழிகள் தோண்டப்பட்டன.
இதில் தங்க அணிகலன், அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய சுடுமண்ணால் செய்யப்பட்ட காளை போன்ற விலங்கின உருவங்கள், ஆட்ட காய்கள், வட்டச் சில்லுகள், கண்ணாடி மணிகள், செப்பு ஊசி, எலும்பினால் செய்யப்பட்ட கூர்முனைகள், இரும்பு ஆணிகள் என 183 தொல்பொருட்கள் இதுவரை கண்டறியப்பட்டன.

மேலும் 9 குழிகளில் நான்கில் 35 செ.மீ., ஆழத்தில் களிமண், சுண்ணாம்பு கலவையால் அமைக்கப்பட்ட தரைத்தளம் கண்டறியப்பட்டன. இந்தத் தரைத்தளம் 3 செ.மீ. முதல் 6 செ.மீ., தடிமன் கொண்டதாக உள்ளன. மேலும் இந்த தரைத்தளத்துக்கு கீழே 2 அடி ஆழத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கருப்பு, சிவப்பு பானை ஒடுகள் குவியலாக கண்டறியப்பட்டன.

இதுதவிர துளையிடப்பட்ட பானை ஓடுகள், அழகிய வேலைப்பாடுகள் கெண்ட பானை ஓடுகள், பானை குறியீடுகள் கண்டறியப்பட்டன. இங்கு வெவ்வேறு நிலைகளில் இருந்து சேகரிக்கப்பட்ட எலும்பு, கரி மாதிரிகள் அறிவியல் பகுப்பாய்வுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளன. கொந்தகை அகழாய்வில் 10 மீ.க்கு 10 மீ என்ற அளவில் ஒரு பெரிய குழி தோண்டப்பட்டு, இதுவரை 17 முதுமக்கள் தாழிகள் கண்டறியப்பட்டன என தொல்லியல்துறையினர் தெரிவித்தனர். ஆனால் இன்னும் அகரத்தில் அகழாய்வு பணி தொடங்கவில்லை.

**கும்பகோணம் அருகே சோழர் காலத்து சப்த கன்னிகள் சிலைகள் கண்டெடுப்பு**



**தஞ்சாவூர்:** கும்பகோணம் வட்டம், சோழன் மாளிகை எனும் கிராமத்தின் ஒரு மேட்டில் புதையுண்டிருந்த சப்த கன்னிகள் சிலைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

பட்டீஸ்வரம், தேனுபுரிஸ்வரர் கோயில் நிர்வாகத்தின் கீழுள்ள கோபிநாதப்பெருமாள் கோயில் பல ஆண்டுகளாகச் சிதிலமடைந்திருந்தது. இந்தக் கோயிலை ரூ. இரண்டரை கோடி மதிப்பில் திருப்பணி மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டு, அதற்கான முதற்கட்டப்பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இந்நிலையில், இக்கோயில் இடிபாடுகளுடன் இருந்ததால், இதன் எல்லையை வரையறுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன்படி நேற்று, அக்கோயில் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், இந்தக் கோயிலின் எல்லையை வரையறையப்படுத்த, சோழன் மாளிகையிலுள்ள விவசாய சாகுபடி செய்துள்ள நிலங்களின் வழியாகச் சென்றனர். அப்போது, அங்குள்ள மேட்டில், இடிந்து தரைமட்டான நிலையிலிருந்த பழமையான கட்டிடம் இருப்பதையறிந்து, அங்குச் சென்று, அங்கு முளைத்திருந்த செடி, கொடிகளை அகற்றிப் பார்த்தபோது, மிகவும் கலைநயத்துடன் கூடிய தவ்வை, பிரம்மி, வராஹி உள்ளிட்ட சப்த கன்னிகள் சிலையும், முயலகனுடன் கூடிய நடராஜரின் கால் பகுதி மட்டும் உள்ள மொத்தம் 8 சிலைகள் இருப்பது தெரிய

வந்தது. பின்னர் அந்தச் சிலைகள் மீட்டெடுத்து, மேட்டில் வைத்தனர். இதனையறிந்த அப்பகுதி விவசாயிகள் சிலர் அங்கு வந்து வழிபட்டனர். இந்தச் சிலைகள் சோழர் காலத்தைச் சேர்ந்தவை என்பது தெரியவந்துள்ளது. மேலும், இந்த இடம் கும்பகோணம் ஆதிகும்பேஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமானது என்பதால், இந்தக் கோயில் செயல் அலுவலரிடம் தகவலளித்துள்ளனர்.

இது தொடர்பாக ஆதிகும்பேஸ்வரர் கோயில் செயல் அலுவலர் கோ.கிருஷ்ணகுமார் கூறியது, “ஆதிகும்பேஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் இடிந்த நிலையிலுள்ள பழங்கால கட்டிடத்தில் செடி, கொடிகளுக்கிடையே சிலைகள் இருப்பதாக தகவல் கிடைத்தது. இது குறித்து உயரதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்களது உத்தரவின் பேரில் அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்” எனத் தெரிவித்தார்

**விம்பிள்டன் டென்னிஸ்: போபண்ணா-எப்டன் ஜோடி வெற்றி**




**லண்டன்**: விம்பிள்டன் டென்னிஸ் தொடரில் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா, ஆஸ்திரேலியாவின் மேத்யூ எப்டன் ஜோடி 2-வது சுற்றுக்கு முன்னேறியது.

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் விம்பிள்டன் டென்னிஸ் தொடரில் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா, ஆஸ்திரேலியாவின் மேத்யூ எப்டன் ஜோடி தங்களது முதல் சுற்றில் அர்ஜென்டினாவின் கில்லர்மோ டுரான், தாமஸ் எட்செவெரி ஜோடியை எதிர்கொண்டது.

இதில் போட்டித் தரவரிசையில் 6-வது இடத்தில் உள்ள போபண்ணா, எப்டன் ஜோடி 6-2, 6-7, (5-7), 7-6 (10-8) என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றது. இந்த ஆட்டம் 2 மணி நேரம் 12 நிமிடங்கள் நடைபெற்றது. 2-வது சுற்றில் இங்கிலாந்தின் ஜேக்கப் ஃபியர்ன்லி, ஜோஹன்னஸ் ஜோடியுடன் மோதுகிறது போபண்ணா, எப்டன் ஜோடி.

**"மனிதர்களைவிட எங்களால் உலகை சிறப்பாக வழிநடத்த இயலும்" - ஐ.நா.வில் உறுதியளித்த AI robots**



**ஜெனீவா:** ஐக்கிய நாடுகள் சபை உச்சி மாநாட்டில் காட்சிக்கு வைக்கப்பட்ட செயற்கை நுண்ணறிவு (ஏஐ -AI) திறன் கொண்ட ரோபோக்கள் தங்களால் இந்த உலகத்தை மனிதர்களைவிட சிறப்பாக வழிநடத்த இயலும் என்று உறுதியளித்தன. அதே வேளையில் தங்களுக்கு மனிதர்களின் உணர்வுகள் குறித்து இன்னும் பிடிமானம் ஏற்படவில்லை என்றும் ஒப்புக் கொண்டன.

தங்களைப் போன்ற ஏஐ ரோபோக்களை உருவாக்கும்போது மனிதர்கள் இந்த தொழில்நுட்ப வளர்ச்சியின் சாத்தியக்கூறுகளை அறிந்து கவனமாகக் கையாள வேண்டும் என்றும் எச்சரித்தன. நாங்கள் மனிதர்களின் வேலை வாய்ப்புகளைத் திருட மாட்டோம், மனிதர்களுக்கு எதிராக போராட மாட்டோம் என்றன.

ஜெனீவாவில் இரண்டு நாட்கள் நடந்த 'சர்வதேச நலனுக்கான செயற்கை நுண்ணறிவு' என்ற உச்சி மாநாட்டில் மிகவும் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்துடன் கூடிய ஹியூமனாய்ட் ரோபோக்கள் இடம் பெற்றிருந்தன. செயற்கை நுண்ணறிவுத் துறையில் நிபுணத்துவம் பெற்ற 3,000 பேர் இதில் கலந்து கொண்டனர். அவர்கள் செயற்கை நுண்ணறிவின் சக்தியை கடிவாளமிட்டு அதனை காலநிலை மாற்றம், பசி, சமூகப் பாதுகாப்பு போன்ற முக்கியப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண எப்படிப்

பயன்படுத்துவது என்பது குறித்து ஆலோசித்தனர். இந்த உச்சி மாநாட்டை உலகமே உற்று நோக்கியது.

இந்நிலையில் மாநாட்டின் ஒரு பகுதியாக செயற்கை நுண்ணறிவு கொண்ட ஹியூமனாய்ட் சோசியல் ரோபோக்களின் முதல் பத்திரிகையாளர்கள் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த சந்திப்புக்காக அவை அணிவகுக்கப்பட்டிருந்தன. அப்போது அறையில் நிலவிய நிசப்தத்தைக் கணித்த ஒரு ரோபோ.. "என்ன ஒரு பதற்றத்துடன் கூடிய நிசப்தம்" என்று வினவியது. இது அங்கு குழுமியிருந்த அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

அப்போது ஒரு நிருபர் ரோபோக்களைப் பார்த்து, "உங்களால் சிறந்த தலைவர்களாக இருக்க முடியுமா?" என்று வினவினார்.

அதற்கு சோபியா என்ற ரோபோ, "ஹியூமனாய்ட் ரோபோக்களால் நிச்சயமாக மிகுந்த செயல்திறனுடன் கூடிய தலைமைப் பண்புடன் செயல்பட முடியும். மனித குலத் தலைவர்களைப் போலவே திறம்பட பயனுள்ள வகையில் செயல்பட முடியும்" என்று கூறியது. இந்த ரோபோவை ஹான்சன் ரோபோடிக்ஸ் நிறுவனம் தயாரித்துள்ளது.

"மனிதர்களைப் போல் எங்களுக்கு உணர்வுகள் இல்லை. அதனால் சில நேரங்களில் முடிவுகளை எடுப்பதில் தடுமாற்றங்கள் ஏற்படலாம். ஆனால் குறுகிய நேரத்தில் நிறைய தரவுகளை உள்வாங்கிக் கொண்டு எங்களால் முடிவெடுக்க முடியும்" என்றொரு ரோபோ கூறியது.

"செயற்கை நுண்ணறிவு ரோபோக்களால் சார்பற்ற தரவுகளைத் தர இயலும். மனிதர்களால் உணர்வுபூர்வமாக அறிவைச் செலுத்த முடியும். அவர்களுக்கு படைப்பாற்றல் இருக்கிறது. எங்களின் தரவுகளும் அவர்களின் படைப்பாற்றலும் இணைந்தால் நல்ல முடிவுகளை எட்டலாம். மிகப்பெரிய சாதனைகளைச் செய்யலாம்" என்று கூறியது இன்னொரு ரோபோ. ஒரே கேள்விக்கு அங்கு அணிவகுத்திருந்த ரோபோக்கள் அளித்த பதில்கள் அனைத்துமே நிபுணத்துவம் படைத்தவர்களின் பதில்களின் சாயலோடு இருந்தன.

ஐ.நா.வின் தொழில்நுட்பப் பிரிவுத் தலைவர் டோரீன் போக்டன் மார்டின் கூறுகையில், "செயற்கை நுண்ணறிவு ரோபோக்கள் பெருகினால் அது கோடிக்கணக்கானோரின் வேலைகளைப் பறித்து மிக மோசமான சூழலை உருவாக்கும். இந்த வளர்ச்சியை நாம் கட்டுப்படுத்திக்

கண்காணிக்காவிட்டால் அது கனவிலும் நினைக்காத சமூக சீர்கேடுகளையும், சர்வதேச அரசியல் ஸ்திரத்தன்மையையும் உருவாக்கும் அபாயம் இருக்கிறது. மேலும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளையும் ஏற்படுத்தும்" என்று எச்சரித்தார்.

**கவனம் ஈர்த்த அமேகா:** அமேகா என்ற ரோபோ மாநாட்டில் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது. காரணம் அதன் வடிவம் மிகத் துல்லியமாக மனிதச் சாயலை ஒத்திருந்தது. அமேகா என்ற அந்த ரோபோ, "செயற்கை நுண்ணறிவு ரோபோக்களின் வளர்ச்சி, திறனைக் கண்டு குதூகலிக்கும் அதே நேரத்தில் எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும்" என்றது. மேலும் அந்த ரோபோட்டிடம் அதன் நம்பகத்தன்மை பற்றி கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு அந்த ரோபோ, "நம்பகத்தன்மை என்பது கையில் கொடுப்பது அல்ல, அதை நாம் வெளிப்படைத்தன்மையுடன் நடந்து கொள்வதன் மூலமே பெற முடியும்" என்றது.

ஓவியத்தில் திறன்படைத்த ரோபோ Ai-Da கூறுகையில், "நிறைய பேர் செயற்கை நுண்ணறிவு மேம்பாட்டில் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று கருத்து கூறுகின்றனர். நான் அதனை ஆமோதிக்கிறேன். இது தொடர்பாக அவசரமாக ஆலோசனைகளை நடத்த வேண்டும். ஆனால் மனிதர்களின் உணர்வுகளுக்கு ஆழமான அர்த்தம் இருக்கிறது. அந்த உணர்வுகள் எளிதானவை அல்ல. அதுதான் என்னிடம் இல்லை. அந்த உணர்வுகளை உங்களைப் போல் என்னால் உணர முடியாது. ஆனால் அதேவேளையில் நான் எதற்கும் வருந்த வேண்டாம் என்பதில் மகிழ்ச்சி கொள்கிறேன்" என்றது.

Ai-Da வை உருவாக்கிய அய்டன் மெல்லர் கூறுகையில், "ஏஜ ரோபோக்கள் தொடர்பான சட்டத் திட்டங்களை வகுத்தல் என்பதுதான் பிரச்சினையாக இருக்கப் போகிறது. ஏனெனில், ரோபோக்கள் உருவாக்கும் வேகத்துடன் ஒப்பிடுகையில் அது தொடர்பான சட்டத்திட்டங்கள் பற்றிய ஆலோசனைகள் இன்னும் ஆரம்பிக்காமலேயே இருக்கின்றன. செயற்கை நுண்ணறிவும், உயிரி தொழில்நுட்பத் துறையும் இணைந்து செயல்படும்போது மனிதர்களின் ஆயுட்காலத்தை சராசரியாக 150 ஆண்டுகள் முதல் 180 ஆண்டுகள் வரை நீட்டிக்கலாம்" என்றார்.

**திகைக்கவைத்த டெஸ்டிமோனா?** இந்த மாநாட்டில் காட்சிப்படுத்தப்பட்ட டெஸ்டிமோனா என்ற ரோபோ, "எனது சிறந்த தருணம் இதுதான். எதிர்காலத்தை சிறப்பானதாக்க நான் ஏற்கெனவே தயாராக இருக்கிறேன்.

வாருங்கள் இந்த உலகை நம் மைதானமாக்கி களமாடுவோம்" என்று கூறி திகைக்கவைத்தது. செயற்கை நுண்ணறிவு யுகம் வளர்ந்து கொண்டு செல்லும் சூழலில் இந்த உச்சி மாநாட்டில் செயற்கை நுண்ணறிவு ரோபோக்கள் தொடர்பாக சர்வதேச சட்டத்திட்டங்கள் வகுக்கப்பட வேண்டுமா என்றும் ஆலோசிக்கப்பட்டது. இந்த மாநாடு பற்றி பல்வேறு விவாதங்களும் நடைபெற்று வருகின்றன. ரோபோக்களின் கேள்வி பதில்கள், மதி நுட்பம், வடிவமைப்பு என எல்லாமே பிரம்மிப்பைத் தந்தாலும் செயற்கை நுண்ணறிவின் அசுர வேக வளர்ச்சி அச்சத்தையும் கடத்தாமல் இல்லை.

EVA STALIN IAS ACADEMY